# NIC/GOV மின்னஞ்சல்களை அணுக கவச் (KAVACH) பயன்பாட்டை கணினியில் நிறுவுவது எப்படி?

இந்த வழிகாட்டியில் அரசின் NIC/GOV மின்னஞ்சல் கணக்குகளை அணுக கவச் பயன்பாட்டை (Kavach Application) கணினியில் நிறுவுவது எப்படி என்பதைப் பார்ப்போம்.

## கவச் பயன்பாடு (Kavach Application) ஒரு அறிமுகம்:

சாதாரணமாக உங்களின் NIC மின்னஞ்சலை அணுக பயனர் பெயர் மற்றும் கடவுச்சொல் போதுமானது. இந்த நடைமுறையில் சிறிது மாற்றம் செய்து மற்றுமொரு பாதுகாப்பு அளிக்க இந்த கவச் பயன்பாடு அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. அதாவது கடவுச்சொல் அளிப்பதுடன், கவச் பயன்பாடு வாயிலாக மேலும் ஒரு அங்கீகாரத்தை அளித்து (2FA – Two Factor Authentication) உங்களின் மின்னஞ்சலை அணுக வேண்டியிருக்கும். இதன் மூலம் உங்களின் மின்னஞ்சலை அனுமதி இல்லாத எந்த ஒரு நபரும் அணுக இயலாது. உங்களின் மின்னஞ்சல் பயன்பாட்டை பாதுகாப்பதுடன், அதன் அணுகுதல்களை உங்களின் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்ளவும் வழிவகை செய்கிறது.

இந்த கவச் பயன்பாட்டை உங்களின் கணினி, அலைபேசி மற்றும் மடிக்கணினி போன்ற சாதனங்களில் நிறுவி, உங்களின் மின்னஞ்சலையும் இணைத்த பிறகு, ஒவ்வொரு முறையும் உங்களின் மின்னஞ்சலை அணுகும்போதும் , இந்த கவச் பயன்பாட்டிற்கு வரும் அறிவிப்பை **“Accept”** செய்து உள்நுழைய வேண்டும் .இந்த கவச் பயன்பாடனது மிகவும் எளிமையானது. இந்த வழிகாட்டியில் எளிய தமிழில் விளக்கப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றினாலே போதுமானது. மேலும் கவச் பயன்பாடு பற்றிய விவரங்களுக்கு உங்களின் துறை / மாவட்ட NIC அதிகாரிகளை தொடர்பு கொள்ளுங்கள்.

இனி நாம் இதற்கான வழிமுறைகளைப் பார்ப்போம்.

**1)** முதலில் கீழ்க்காணும் இணைய முகவரியில் உங்களின் NIC மின்னஞ்சல் வாயிலாக OTP அளித்து உள்நுழைந்து கவச் பயன்பாட்டை பதிவிறக்கம் செய்யவும்.

https://kavach.mail.gov.in/







**2)** இப்போது நீங்கள் **Kavach.msi** என்பதை பதிவிறக்கம் செய்திருப்பீர்கள். அதை Double Click செய்து பின்வருமாறு உங்கள் கணினியில் நிறுவவும்.




இப்போது நாம் கணினியில் கவச் பயன்பாட்டை நிறுவியுள்ளோம்.

**3)** கவச் பயன்பாட்டை திறந்து உங்களின் பயனர்பெயர் மற்றும் கடவுச்சொல் கொடுத்து **Submit** செய்யவும். உங்களின் மின்னஞ்சலோடு இணைக்கப்பட்டுள்ள

அலைபேசியில் ஒரு OTP பெறுவீர்கள். அதை உள்ளீடு செய்து மீண்டும் **Submit** செய்யவும்.




**4)** இப்போது கீழ்க்கண்டவாறு திரையில் காண்பீர்கள்.



**5)** இப்போது வெற்றிகரமாக உங்கள் மின்னஞ்சல் கவச் பயன்பாட்டில் இணைக்கப்பட்டுள்ளது. இது போன்று நீங்கள் மற்ற இரண்டு கணினியில் அல்லது அலைபேசியில் உங்கள் மின்னஞ்சலை கவச் பயன்பாட்டில் இணைக்கலாம். ஒரு மின்னஞ்சலை அதிகபட்சம் மூன்று சாதனங்களில் இணைக்க இயலும்.

**6)** இனி நீங்கள் ஒவ்வொரு முறையும் FireFox, Chrome போன்ற இணைய உலாவியில் (Web Brower) உங்கள் மின்னஞ்சலை அணுகும்போதும் கீழ்கண்டவாறு ஒரு அறிவிப்பினை(**Notification**) கவச் இணைக்கப்பட்டுள்ள சாதனங்களில் கிடைக்கப் பெறுவீர்கள்.




உடனே **Accept** செய்தால் நீங்கள் உங்கள் மின்னஞ்சலில் உள்நுழைய முடியும். நீங்கள் **Accept** செய்ய காலதாமதம் செய்தால் **"Timeout"** பிழை பெற்று உங்களால் உள்நுழைய முடியாது. **Deny** என்பதை தெரிவு செய்தால் உள்நுழைய இயலாது. இதன்மூலம் நீங்களோ அல்லது உங்களால் அங்கீகாரம் பெற்றவரைத் தவிர எவரும் உங்கள் மின்னஞ்சலை அணுக இயலாது.

ஒருவேளை எந்த ஒரு அறிவிப்பினையும் வரப்பெறா விட்டால் நீங்கள் கீழ்க்கண்டவாறு அறிவிப்பினை இழுக்க(**PULL**) இயலும்.




இப்போதும் உங்களால் எந்த ஒரு அறிவிப்பினையும் பெற இயலாத நிலையில் மற்றொரு முறையிலும் உங்களால் மின்னஞ்சலை அணுக இயலும். அதை இப்போது பார்ப்போம்

**7)** உங்களின் பயனர்பெயர் மற்றும் கடவுச்சொல்லோடு கவச் பயன்பாட்டுத் திரையில் தோன்றும் ஆறு இலக்க எண்களை(**OTP**) எந்தவித இடைவெளியும் இல்லாமல் அளித்தும் உங்களின் மின்னஞ்சலில் உள்நுழைய இயலும்.







உதாரணமாக உங்கள் கடவுச்சொல் TestPass123# எனில்நீங்கள் கடவுச்சொல் , காலத்தில் கொடுக்கவேண்டியது TestPass123#914153 . இந்த OTP யானது 30 நொடிகளுக்கு ஒரு முறை மாறிக்கொண்டே இருக்கும் என்பதை நினைவில் கொள்க.

கவச் பயன்பாட்டைப் பற்றிய விரிவான தகவல்களுக்கு **"கவச் (KAVACH) பயன்பாட்டினை நிறுவுதல் மற்றும் பயன்படுத்துதல்"** என்ற பயனர் வழிகாட்டியைப் படிக்கவும்.

*********